## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**DVC.No. 61/2024 P.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சந்திரா | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. அய்யாதுரை | **Calling** | : | |
| **Village** | : | அங்கலகுறிச்சி, பொள்ளாச்சி. | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 60 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.06.2025.**

**முதல் விசாரணை :**

நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். எனது மகள் மங்கையர்கரசிக்காக அவரது பொது அதிகார முகவர் என்ற தகுதியில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவுகள் 18(e) and 19(8) ன் கீழ் பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண ஆணையுறுதி ஆவணம் மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக பாவித்துக்கொள்ள வேண்டி இந்நீதிமன்றத்தை பணிந்து வேண்டி கேட்டுக்கொள்கிறேன். எனது தரப்பு சான்றாவணங்களாக பின்வருவனவற்றை குறியீடு செய்கிறேன். **(2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் மங்கையர்கரசியை விசாரிக்காமல் அவரது பவர் ஏஜெண்டை விசாரிக்ககூடாது என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு குடும்ப வன்முறை தொடர்பான தனிப்பட்ட விதத்தில் நடந்த சம்பவங்களை விசாரிக்கவேண்டிய வழக்கு இல்லை என்பதால் மனுதாரர் மங்கையர்கரசி தான் சாட்சியம் சொல்லவேண்டும் என்ற 2,3 எதிர்மனுதாரர்கள் ஆட்சேபணை நிராகரிக்கப்பட்டு மனுதாரரின் பவர் ஏஜெண்ட் தகுதியில் அவரது தாயார் சந்திரா சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.)**

| **வ. எண்.** | **ஆவணங்கள் விவரம்** | **குறியீடு செய்யப்பட்ட விவரம்** | **ஆட்சேபனை** |
|---|---|---|---|
| 1 | எனது மகள் மங்கையர்கரசிக்கு சொந்தமான 80 பவுன் நகைகள் அவரது | ம.சா.ஆ.1 | -- |

| | | | |
|---|---|---|---|
| | வங்கி லாக்கரில் இருப்பதை குறிப்பிட்டு CC.17/2015 வழக்கில் வழங்கிய உத்தரவின் நகல் | | |
| 2 | எனது மகள் மங்கையர்கரசியால் எனக்கு வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல் | ம.சா.ஆ. 2 | -- |
| 3. | எனது மகள் மங்கையர்கரசியால் மன்னார்குடி நகர ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கிகிளையில் தொடங்கப்பட்ட வங்கி கணக்கின் கணக்கு புத்தக நகல் | ம.சா.ஆ. 3 | -- |
| 4. | எனது மகள் மங்கையர்கரசியால் மன்னார்குடி நகர ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கிக்கிளையில் தொடங்கப்பட்ட லாக்கர் சம்பந்தப்பட்ட குறிப்பு மெமோ | ம.சா.ஆ. 4 | -- |
| 5. | எனது மகள் மங்கையர்கரசியால் ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா வங்கி கிளையில் தொடங்கப்பட்ட லாக்கரில் உள்ள எனது மகளுக்கு சொந்தமான 659.270 கிராம் தங்க நகைகள் பற்றிய விவரப்பட்டியல். | ம.சா.ஆ. 5 | -- |

எனவே, எனது மனு பரிகாரத்தின் படியும், நீதிமன்றம் சரியென கருதும் இதர பரிகாரங்களையும் வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/---J. Tamizhmurugan,

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**மன்னார்குடி.**